மட்டக்களப்பு வரலாற்றில் தர்மரத்னம் வன்னியனார்-ஒரு வரலாற்றுப்பார்வை

நிலாந்தினி செந்தூரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,கலைகலாசாரபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஆய்வுச் சுருக்கம்

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மட்டக்களப்பின் வரலாற்றுப் புலத்தில் ஒரு நிலக்கிழாராகவும், மக்கள் பிரதிநிதியாகவும், பாரம்பரிய சமூகத் தலைவராகவும் விளங்கிய தர்மரத்னம் வன்னியனாரின்(1920) வரலாற்றுப் பங்களிப்பினை ஆவணப்படுத்துவதை இவ்வாய்வு முதன்மை நோக்காகக் கொண்டுள்ளது. வரலாற்று ரீதியாக மத்தியகால வன்னியர் மரபு, பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் வெறுமனே கௌரவப் பதவியாக மாற்றமடைந்த சூழலில்,தர்மரத்னம் வன்னியனார் எவ்வாறு தனது பாரம்பரிய நில மேலாண்மை உத்திகளையும், அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பயன்படுத்தி மட்டக்களப்பின் விவசாய மறுமலர்ச்சிக்கும் சமூகக் கட்டமைப்பிற்கும் வலுவான அடித்தளமிட்டார் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

பண்புசார் ஆய்வு அணுகுமுறையைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ள இக்கட்டுரையில் காலனித்துவகாலக் குறிப்புகள், அரச வர்த்தமானி(1940), பாராளுமன்ற இரங்கல் உரை(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் உரை), இலக்கிய ஆதாரங்கள் மற்றும் மன்னன்குளத்தில்மேற்கொள்ளப்பட்ட களவாய்வு,நேர்காணல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. 1938ஆம் ஆண்டு தொடக்கம் 1943ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 'மட்டக்களப்பு தெற்கு' தொகுதியின் அரசுச்சபை உறுப்பினராகப் பணியாற்றிய தர்மரத்னம் வன்னியனார்,சமகாலத்தில் விவசாய அமைச்சராகவிருந்த டி.எஸ்.சேனநாயக்க மற்றும் அவசரகால உதவி அரசாங்க அதிபர் டாக்டர் ஏ.எம்.ஏ.அஸீஸ் ஆகியோருடன் இணைந்து, இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளப் பெரும் பங்காற்றியுள்ளார்.

1943இல் கல்முனையில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறுவடைத் திருவிழா, யானை ஊர்வலம், தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் பிணைப்பு, அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,பாடசாலைகளுக்கு நிலங்களை தானமாக வழங்கியமை, போக்குவரத்து வளர்ச்சிக்காக பல மரப் பாலங்களை அமைத்தமை மற்றும் பிற்கால 'கல்ஓயாத் திட்டத்திற்கு' (Gal Oya Scheme) முன்னோடியாகத் திகழ்ந்தமை போன்ற பல சான்றுகளை இக்கட்டுரை வெளிக்கொணர்கிறது. உதிரியான தரவுகளாகவும் வாய்மொழித் தகவல்களாக மாத்திரமே காணப்பட்ட வன்னியனார் பற்றிய வரலாற்றுத் தகவல்களை ஒருங்கிணைத்து, மட்டக்களப்பின் விவசாய, சமூக வரலாற்றுப் பக்கங்களில் அவரது ஆளுமையை நிலைநிறுத்த இக்கட்டுரை வழிவகுக்கின்றது.

திறவுச் சொற்கள்: *வன்னியனார், மட்டக்களப்பு, நில மேலாண்மை, விவசாய மறுமலர்ச்சி,அரசுச்சபை*

1. அறிமுகம்:

மட்டக்களப்பு வரலாற்றில் ஏ.எஸ்.தர்மரத்னம் வன்னியனார் ஒரு நிலக்கிழாராகவும், மக்கள் பிரதிநிதியாகவும், பாரம்பரிய சமூகத் தலைவராகவும் விளங்கினார். இருப்பினும் அவரைப் பற்றிய செய்திகள்உதிரியான தரவுகளாகவும் வாய்மொழித் தகவல்களாகவுமே அறியமுடிகின்றது. இந்நிலையினைக் கருத்திற்கொண்டு வன்னியனாரின் முக்கிய இருப்பிடமாக இருந்த மன்னன்குளத்திற்குக் களவாய்வினை மேற்கொண்டு நேர்காணலினூடாகவும் கிடைக்கின்ற வரலாற்றுத் தகவல்களினூடாவும் ஆவணப்படுத்தும் ஆரம்ப முயற்சியாகவே இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

2. கருதுகோள்:

தர்மரத்னம் வன்னியனாரின் நில மேலாண்மை,அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவை பிரித்தானிய காலனித்துவகால மட்டக்களப்பின் விவசாய மறுமலர்ச்சிக்கும் சமூகக் கட்டமைப்பிற்கும் வலுவான அடித்தளத்தினை இட்டுக் கொடுத்திருந்தது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

3. ஆய்வு வினா:

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில்,தர்மரத்னம் வன்னியனாரின் நில மேலாண்மை உத்திகளும் அரசியல் தலைமைத்துவமும் மட்டக்களப்பின் விவசாயப் பொருளாதாரம், சமூக அமைப்பை எவ்வகையில் வடிவமைத்தன? அத்தோடு மட்டக்களப்பின் பிராந்திய வளர்ச்சிக்காக, பிரித்தானிய நிருவாகக் கட்டமைப்பிற்குள்ளும் உள்ளூரிலும்தர்மரத்னம் வன்னியனார் தனது அரசியல் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு பயன்படுத்தினார்? போன்றவற்றை ஆய்வு வினாக்களாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

4. ஆய்வு அணுகுமுறை:

இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையுடன் கூடிய ஒரு பண்புசார் ஆய்வாக அமைகின்றது, காலனித்துவ காலக் குறிப்புக்கள், அரச ஆவணங்கள், விவசாயக் குழு அறிக்கைகள், பத்திரிகைப் பிரசுரங்கள், இலக்கியக் குறிப்புகள், களவாய்வு மற்றும் நேர்காணல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

5. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

5.1 வன்னியனார் மரபும் வரலாற்றுப் பின்னணியும்

மத்தியகாலத்து மட்டக்களப்பிலே வன்னிச் சிற்றரசுகள் பல காணப்பட்டன. மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரதீவு, சம்மாந்துறை, நாடுகாடு, பாணமை என்பன அவற்றுட் பிரதானமானவை. அவற்றின் உற்பத்தியை ஆராய்ந்தறிந்து கொள்வதற்கு ஏதுவான போதிய சான்றாதாரங்கள் இல்லை. ஐரோப்பியர் எழுதிய நூல்கள் சிலவற்றிலும் நிருவாக அறிக்கைகளிலும் சில ஆதாரபூர்வமான குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றோடு வெளியிடப்பட்டுள்ள தேசப்படங்கள் சிலவற்றிலே மட்டக்களப்பு, பாணமை ஆகிய சிற்றரசுகள் 'இராச்சியம்' என்று வர்ணிக்கப்பட்டுள்ளன. வரலாற்று ரீதியாக பொலன்னறுவை, கோட்டே, கண்டி இராச்சியங்களின் கீழ் திறை செலுத்தும் குறுநில மன்னர்களாக விளங்கிய இவ்வன்னியர்கள், பல காலகட்டங்களில் எவ்வித வரிகளும் செலுத்தாமல் பெரும் சுயாட்சியுடன் தங்கள் பிராந்தியங்களை ஆட்சி புரிந்தனர்.

கண்டி இராசதானியில்வன்னியர் சுயாட்சியதிகாரங் கொண்ட சிற்றரசராக விளங்கினர். நிருவாகம், நீதிபரிபாலனம், வேளாண்மை, ஆலயத் தொழும்புகள் என்பன பற்றிய ஏற்பாடுகளை அவர்கள் கண்காணித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் படைகளை வைத்திருந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாகக் கிழக்கிலங்கை வன்னிமைகள் மீது கண்டி அரசரின் மேலாதிக்கம் ஏற்படலாயிற்று. கொட்டியாரம் முதலாகப் பாணமை வரையிலுள்ள வன்னியர் ஆண்டுதோறும் கண்டி மன்னனுக்கு யானை, தேன், மெழுகு முதலியவற்றைத் திறையாகக் கொடுக்க வேண்டும். போர்க்காலங்களிலே படைகளைத் திரட்டிக் கொடுப்பதோடு போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்குவதுமுண்டு. அத்துடன் இராச்சிய பரிபாலனந் தொடர்பான விடயங்களில் அவர்களுக்குக் கௌரவமானதும் பிரதானமானதுமான ஒரு பங்கு கிடைத்திருந்தது. இராச்சியத்திலுள்ள பிரதானிகளை இராசதானிக்கு வரவழைத்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்த பின்பே அரசன் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை மேற்கொள்வது வழமை. அத்தகைய விடயங்களிற் கிழக்கிலங்கை வன்னியர்களும் பங்கு கொள்வதுண்டு. (பத்மநாதன் 2002: 219)
மட்டக்களப்பு பிராந்தியமானது கோறளைப்பற்று, வாகரை,மட்டக்களப்பு,மண்முனை, எருவில், போரதீவு, பழுகாமம், நாடுகாடு, சம்மான்துறை,பாணமை போன்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வன்னியர்களால் நிருவகிக்கப்பட்டது. (பத்மநாதன் 2002:212). 1540 முதல் 1585 வரை ஆட்சி செய்த எதிர்மன்னசிங்கனின் ஆட்சிக்காலத்தில், மட்டக்களப்பை உன்னரசுகிரி, மட்டக்களப்பு, பூமுனைநாடு, மண்முனை, ஏறாவூர் என ஐந்து பிரிவுகளாகப் பிரித்து வன்னியர் முறையை மீண்டும் வலுப்படுத்தினான்.(கந்தையா 1965:108)

அரசியல் நிருவாகத்துடன் மட்டுமல்லாது, சமூக, கலாச்சார அமைப்பிலும் வன்னியர் ஆட்சிக்காலம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. கலிங்க மாகோன் காலத்தில் திட்டமிடப்பட்ட சமூக மரபுகளின்படி, மட்டக்களப்பின் முதன்மைச் சமூகமான முக்குவச் சமூகத்தினரின் கலிங்ககுடி, உலகிப்போடிகுடி, படையாண்டகுடி போன்ற குடிகள்

கோயில் நிருவாகத்திலும் பிராந்திய அமைப்பிலும் முக்கிய அதிகாரத்தைப் பெற்றிருந்தன.(கனகரட்ணம் 1921:35). இத்தகைய பாரம்பரியக் குடிமுறை சார்ந்த நிருவாக நடைமுறைகள் இன்றளவும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தில் தொடர்வதைக் காணலாம்.

கிழக்கிலங்கையில் ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில், அப்பகுதிகளின் நில நிருவாகம், வரி வசூலிப்பு,விவசாய மேம்பாட்டை மேற்கொள்வதற்காகக் குறுநில மன்னர்களைப் போன்ற அதிகாரங்களைக் கொண்ட 'வன்னியனார்' முறைமை பயன்படுத்தப்பட்டது. ஆனால் அவர்களது அதிகாரங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அவ்வன்னிமைப் பதவி வெறும் கௌரவப் பதவியாகவே பார்க்கப்பட்டது. அந்தவகையில் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் 1920ஆம் ஆண்டில் வன்னியனாராகக் கடைமையாற்றிய தர்மரத்னம் அவர்கள் மட்டக்களப்பின்பாரம்பரிய வன்னியனார் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் பெருமளவிலான விவசாய நிலங்களையும், கால்நடைகளையும், யானைகளையும் வைத்திருந்த செல்வாக்குமிக்க வன்னிமைக் குடும்ப நிருவாகப் பரம்பரையைச் சேர்ந்தவராவார்.

5.2 அரசுச்சபை உறுப்பினர் (State Councillor)

1931ஆம் ஆண்டு இலங்கையில் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் 'இலங்கை அரசுச்சபை' (State Council of Ceylon) உருவாக்கப்பட்டது. ஏ.எஸ்.தர்மரத்னம் மட்டக்களப்பு தெற்குத் தொகுதி(Batticaloa South) பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசுச்சபை உறுப்பினராகபணியாற்றினார். இவரது பதவிக்காலம் 1938ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ஆந் திகதி முதல் 1943ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ஆந் திகதி வரை பிரதிநிதியாகப் பணியாற்றினார். இவர் பிரதிநிதித்துவப்படுத்திய 'மட்டக்களப்பு தெற்கு' தொகுதியானது அன்றைய காலகட்டத்தில் தற்போதைய அம்பாறை மாவட்டம் முழுவதையும், மட்டக்களப்பு நகரத்தின் தெற்குப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. அக்காலத்தில் மட்டக்களப்பு தெற்கு என்பது இன்றைய கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில், திருக்கோவில் உள்ளிட்ட முழுமையான அம்பாறை மாவட்டப் பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. அரசுச் சபையில் இவர் அப்போதைய விவசாய அமைச்சரான டீ. எஸ். சேனநாயக்க (D.S.Senanayake) அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, கிழக்கு மாகாண விவசாய மேம்பாட்டிற்காக உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது..

5.3 இரண்டாம் உலகப் போரும் விவசாயப் புரட்சியும்(1943)

1940ஆம் ஆண்டு ஆனி மாதம் 7ஆம் திகதியிட்ட அரசாங்க அரசிதழில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதேச விவசாயச் சங்கங்களின் (Divisional Agricultural Associations) உறுப்பினர்கள் பட்டியல் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. இதன்படி, மண்முனைப்பற்று வடக்கு, ஏறாவூர் மற்றும் கோரளைப்பற்று, மண்முனைத் தெற்கு, எருவில் போரதீவுப்பற்று, சம்மாந்துறைப்பற்று மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேச விவசாயச் சங்கங்களுக்கான கிராமக் குழுப் பிரதிநிதிகளாகவும்(Representatives of Village Committees) நியமன உறுப்பினர்களாகவும் (Nominated Members) தமிழர்களும் முஸ்லிம்களும் இணையாக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, அக்கரைப்பற்று பிரதேச விவசாயச் சங்கத்தின் நியமன உறுப்பினர்களாக திரு.கே.எம்.வி.வி.மீராசாய்புலெவ்வை, திரு.அப்துல்ஹரீம் ஆலிம், திரு.கே.கணபதிக்குருக்கள், திரு.எ.கதிரமலை, திரு.ரி.இளையதம்பி ஆகியோர் நியமிக்கப்பட்டதுடன், சம்மந்துறைப்பற்று பிரிவில் திரு.ஜுவான்பிள்ளை சுவாமி அவர்களுக்குப் பதிலாக திரு. எம்.எம்.இப்ராலெவ்வை நியமிக்கப்பட்டார்.(The Ceylon Government Gazette - 1940.7.06)

இரண்டாம் உலகப் போரின்போது இலங்கைக்கு வெளியே இருந்து உணவுப் பொருட்கள் வருவது தடைபட்டது. இதனால் இலங்கையில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் உருவானது. விவசாய அமைச்சர் டீ. எஸ்.சேனநாயக்க கிழக்கிலங்கையை நாட்டின் 'நெற்களஞ்சியமாக' மாற்ற முடிவெடுத்தார். இதன் நிமித்தம்

அவசரகால உதவி அரசாங்க அதிபராக டாக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ்(Dr.A.M.A.Azeez) நியமிக்கப்பட்டார். ஏ.எஸ்.தர்மரத்னம் போன்ற மட்டக்களப்பு வன்னியனார்களும், நிலக்கிழார்களும் அரச அதிகாரிகளுடன் இணைந்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடுகளை அழித்து விவசாய நிலங்களாக மாற்றினர்.

5.4 யானை ஊர்வலமும் தானிய அறுவடை விழாவும்

1943ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27ஆம் திகதி கல்முனையில் 'தானிய அறுவடை விழா மற்றும் விவசாயக் கண்காட்சி' நடைபெற்றது. விழாவின் பிரதான நோக்கமாக, பிராந்தியத்தில் விரைவுபடுத்தப்பட்ட உணவு உற்பத்தியைக் கொண்டாடுவதற்கும், விவசாயிகளை நவீன உத்திகளில் ஊக்குவிப்பதற்குமாக இது ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாக் குழுவின் தலைவராக ஏ.ஜி.ஏ.அஸீஸ் அவர்களும், செயலாளராக வன்னியனார் எம்.எஸ்.காரியப்பரும் செயற்பட்டனர்.

குறிப்பாக நிந்தவூர்பற்று, செங்கற்படையில் 475ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்ட மாதிரிப் பண்ணையிலேயே அறுவடை விழா தொடங்கியது. குறித்த தினத்தில் காலை 10:45மணிக்கு, கண்டி கைவினைஞர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மரபுசார் அரிவாள்களை வந்திருந்த முக்கிய விருந்தினர்களுக்கு அஸீஸ் வழங்கினார். இந்நிகழ்வில் அப்போதைய விவசாய, நிலங்கள் அமைச்சரான டீ.எஸ்.சேனநாயக்க, உட்துறை அமைச்சர் ஏ.மகாதேவா, அரசுச்சபை உறுப்பினர்களான ஏ.எஸ்.தர்மரத்னம், டி.எச்.கொத்தலாவல, ஏ.ஆர்.ஏ.ரஸீக் மற்றும் விவசாயத் திணைக்கள பணிப்பாளர் ஈ.ரொட்ரிகோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்விற்கு வருகை தந்த விவசாய அமைச்சர் டீ.எஸ்.சேனநாயக்கவை உபசரிக்க ஏ.எஸ். தர்மரத்னம் தனது சொந்த யானையைப் பயன்படுத்தினார். அக்கரைப்பற்றிலிருந்து செங்கற்படைப் பண்ணை வரை சுமார் 5மைல் தூரத்திற்கு மேடு,பள்ளங்கள் நிறைந்த விவசாயப் பாதையில்,தருமரத்தினத்தின் யானை பூட்டப்பட்ட விசேட வண்டியிலில் அமைச்சர் அழைத்துச் செல்லப்பட்டார். இவருக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டிகளில் மக்கள் ஊர்வலமாகச் சென்றனர். இப்பயணத்தை அமைச்சர் டீ.எஸ்.சேனநாயக்க தனது வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவம் எனப் பாராட்டினார்.

பாரம்பரிய நெல் குற்றுதலும் கள உணவும் குறிப்பிடத்தக்க அம்சமாக அமைகின்றது. முதலாவது நெற்கதிர்கள் அறுவடை செய்யப்பட்டு அஸீஸிடம் ஒப்படைக்கப்பட்ட பின், நெல்லை உரலில் போட்டு அமைச்சர் டீ.எஸ்.சேனநாயக்க மற்றும் ஏ.மகாதேவா ஆகியோர் பாரம்பரிய முறைப்படி நெல் குற்றினர். பண்ணையில் விளைவிக்கப்பட்ட அரிசி மற்றும் தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட விசேட கள மதிய உணவு (Field lunch) அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

கல்முனை மைதானக் கண்காட்சி: அறுவடை நிகழ்வுக்குப் பிறகு கல்முனை மைதானத்தில் ஒரு வாரம் நடைபெற்ற விவசாய, கைத்தொழில் கண்காட்சியை அமைச்சர் டீ. எஸ். சேனநாயக்க திறந்து வைத்தார். இதில் கால்நடைகள் மற்றும் விவசாயக் கருவிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இவ்விழா தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் முழுமையான ஒற்றுமையிலும் ஒத்துழைப்பிலும் நடந்து முடிந்ததோடு, கிழக்கிலங்கையை நாட்டின் முதன்மை நெற்களஞ்சியமாக மாற்றுவதற்கு வித்திட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகப் பதிவானது.

5.5 சமூக,மத நல்லிணக்கம்

தர்மரத்னம் அவர்களின் காலத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே மிக ஆழமான நல்லிணக்கமும் சகோதரத்துவமும் நிலவியது. முஸ்லிம் அதிகாரியான டாக்டர் ஏ.எம்.ஏ.அஸீஸ், தமிழ் தலைவரான ஏ.எஸ்.தர்மரத்னம்

மற்றும் முஸ்லிம் தலைவர்களான எம்.எஸ்.காரியப்பர், எம்.எம்.இப்றாஹிம் ஆகியோர் இணைந்து பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு மத பேதமின்றி உழைத்தனர். இத்தகைய வரலாற்றுப் பின்னணி, ஏ.எஸ்.தர்மரத்னம் அவர்களை கிழக்கிலங்கையின் விவசாய வரலாற்றுப் பக்கங்களில் என்றும் நினைவுகூரத்தக்க ஒரு ஆளுமையாக மாற்றியுள்ளது.

5.6 வன்னியனாரின் இல்லம்

அக்கரைப்பற்று பகுதியில் உள்ள 'மன்னன்குளம்' வன்னியனாரின் முக்கிய வசிப்பிடங்களில் ஒன்றாகும். இது நான்கு தலைமுறைகளாக ஒரே குடும்பத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இத்தோட்டத்தின் அளவு 25ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தென்னந்தோட்டம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்டது. 1952ஆம் ஆண்டு கட்டப்பட்ட பிரதான இல்லம்,வன்னியனாரின் முதன்மை வசிப்பிடமாக மாறியது. 1924ஆம் ஆண்டு தனது 8ஆம் வயதில் மன்னன்குளத்தில் வேலை செய்யும் யானையைப் பராமரிக்கும் பயிற்சிக்காக வந்த திருக்கோவிலைச் சேர்ந்த சாமித்தம்பி என்பவர் தொடர்ச்சியாக இத்தோட்டத்தை நிருவகித்து வந்தார். தற்போது அவரது பேரனான ரூபன் இச்சொத்தின் மேலாளராகப் பணியாற்றி வருகிறார். இருப்பினும் 1985ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது இந்த இல்லமும் ஏனைய கட்டிடங்களும் தீக்கிரையாக்கப்பட்டு எரிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக 2009ஆம் ஆண்டுவரை இத்தோட்டம் கவனிப்பாரற்றுக் காணப்பட்டது. பின்னர் 2011 முதல் 2016 வரையிலான காலப்பகுதியில் இல்லம் மீண்டும் கட்டப்பட்டது. தற்போது இயற்கை விவசாய முறைகள், பாரம்பரிய நெல் ரகங்களின் செய்கை மூலம் இத்தோட்டம் மீளமைக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக, பல்வேறு வகையான பறவைகளும் வண்ணத்துப் பூச்சிகளும் இத்தோட்டத்திற்கு மீண்டும் திரும்பத் தொடங்கியுள்ளன.

தர்மரத்னம் வன்னியனார் ஒரு தீவிர வேட்டைப்பிரியராவார். வேட்டைப் பயணத்தின் போது உடல்நலம் பாதிக்கப்பட்ட காரணத்தினால் 1943ஆம் ஆண்டில் அரசுச் சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். அத்தோடு இவரது மரணத்தையொட்டி பாராளுமன்றத்தில் இரங்கல் உரையும் நிகழ்த்தப்பட்டது. அதில் திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்கள்மேல்வருமாறு குறிப்பிட்டார்.'அவையின் முன்னணியாளர் கூறிய கருத்துக்களோடு நானும் என்னை இணைத்துக் கொள்ள விரும்புகிறேன். திரு.தர்மரத்னம் அவர்கள் சில வருடங்களாக இந்தச் சபையின் உறுப்பினராக இருந்தார். மேலும், கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகள், குறிப்பாக அம்மாகாணத்தின் விவசாயப் பிரச்சினைகள் குறித்து அவர் மிக நெருக்கமான மற்றும் ஆழமான அறிவைக் கொண்டிருந்தார் என்பது எப்போதும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான விடயங்கள் விவாதத்திற்கு அல்லது பரிசீலனைக்கு வரும்போதெல்லாம், அவரது பங்களிப்புகள் எப்போதும் மரியாதையுடன் பார்க்கப்பட்டன. உண்மையில், திரு.தர்மரத்னம் அவர்கள் 'கல்ஓயா திட்டத்தின்(Gal Oya Scheme) முன்னோடியாக இருந்தார் என்று நான் நம்புகிறேன். அத்திட்டம் தொடர்பாக அவர் மிகுந்த ஆர்வம் காட்டியதுடன், அத்திட்டத்தைத் தொடங்குவதற்கான ஆலோசனைகளையும் முன்வைத்த ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். அவரது துயரமான மறைவையடுத்து, இந்த அவையின் அனுதாபத்தை அவரது உறவினர்களுக்குத் தெரிவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையுடன் நானும் என்னை இணைத்துக் கொள்கிறேன்.'

5.7 வன்னியனாரின் சமூக சேவைகள்

தர்மரத்னம் வன்னியனார் மட்டக்களப்பு தெற்குப் பகுதியில் சுமார் நூறு ஏக்கர் நெல் நிலங்கள், தென்னந்தோட்டங்களைச் சொந்தமாகக் கொண்ட ஒரு நிலப்பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவராவார். இருப்பினும் அவர் எப்போதும் ஏழை மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினார். தற்போதும் அவரது கொடைத்தன்மைக்காக பிரதேச மக்களால் பெரிதும் நினைவு கூரப்படுகிறார். கடுமையான பஞ்ச காலங்களில் மக்கள் இவரை நாடி வந்தபோது, தனது நெற்களஞ்சியங்களில் இருந்து ஏழை மக்களுக்கு மூடை மூடையாக நெல் வழங்கி உதவினார். அத்தோடு கல்வி, விவசாயம், போக்குவரத்துத் துறைகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை இவர் முன்னெடுத்தார்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைந்திருக்கும் தற்போதைய நிலம், கல்லடி நாவற்குடாவில் அமைந்துள்ள தர்மரத்னம் வித்தியாலயப் பாடசாலைக்கான நிலங்களைத் தானமாக வழங்கினார்.1943ஆம் ஆண்டு நடைபெற்ற விவசாயக் கண்காட்சி,அறுவடைத் திருவிழாவில் முக்கிய பங்காற்றினார். அத்தோடு திரு.தர்மரத்னம் அவர்கள் 'கல் ஓயா திட்டத்தின்'(Gal Oya Scheme) முன்னோடியாக இருந்து செயற்பட்டார்.(நேர்காணல்: புண்ணியமூர்த்தி,ஓய்வுபெற்ற அதிபர்),போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக இவர் பல மரப் பாலங்களை அமைத்துக் கொடுத்தார். ஊரணி, களியோடை, நாவலாறு, பட்டியடிப்பிட்டி,காஞ்சிரங்குடா, பனங்காடு, அறுகம்பை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட மரப் பாலங்கள் இதில் குறிப்பிடத்தக்கவையாகும். (நேர்காணல்: மீனா தங்கராஜா, முன்னாள் கிழக்குப்பல்கலைக்கழகப் பேராசிரியர்).

6. முடிவுரை

மட்டக்களப்புப் பிராந்திய வரலாற்றில் தர்மரத்னம் வன்னியனாரின் பங்களிப்பானது வெறுமனே ஒரு தனிநபரின் சாதனையாக அமையாமல், பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு சமூகமும் அதன் விவசாயப் பொருளாதாரமும் எவ்வாறு மீட்சியடைந்தது என்பதற்கான வரலாற்றுச் சான்றாகின்றது.

பண்டைய வன்னியர் மரபின் தொடர்ச்சியாக வந்த இவர், காலனித்துவ அதிகாரக் கட்டமைப்பிற்குட்பட்டும், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி விவசாயத் துறையில் ஒரு பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். குறிப்பாக 1940களில் நிலவிய உலகப்போர்க் கால உணவு நெருக்கடியின் போது, சாதி, மத எல்லைகளைக் கடந்து தமிழ், முஸ்லிம் சமூகங்களை ஒருங்கிணைத்து, கிழக்கிலங்கையை நாட்டின் 'நெற்களஞ்சியமாக' மாற்றுவதில் அவர் ஆற்றிய பங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. கல்ஓயாத் திட்டத்திற்கான ஆரம்பகட்ட அடித்தளமிட்டவராக முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் பாராளுமன்றத்தில் போற்றப்பட்டமை, இவரது தொலைநோக்குப் பார்வைக்குச் சிறந்த சான்றாகும்.

மேலும், அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரி,பாடசாலைகளுக்கு நிலதானம் அளித்தமை, ஊறணி,அறுகம்பை போன்ற பல பிரதேசங்களை இணைக்கும் பாலங்களை அமைத்தமை, பஞ்சம் வந்த காலங்களில் தானியக் களஞ்சியங்களைத் திறந்து மக்களுக்கு உதவியமை ஆகியவை இவரது கொடைப் பண்பையும் சமூக அக்கறையையும் வெளிப்படுத்துகின்றன. போர்க்கால அழிவுகளால் இவரது மன்னன்குளம் இல்லம் மற்றும் ஆவணங்கள் அழிவுற்ற போதிலும், இயற்கை விவசாயம்,பாரம்பரிய நெற்செய்கை மூலம் அவ்வில்லம் மீண்டும் மீளமைக்கப்படுவது போல,தர்மரத்னம் வன்னியனாரின் வரலாறும் மட்டக்களப்பின் வரலாற்றுப் பக்கங்களில் நினைவுகூரப்பட வேண்டியதாகும்.

உசாத்துணை

[1] The Ceylon Government Gazette (1940.7.06), Government Printers.

[2] Vote of condolence: Mr. S. Dharmaretnam, 25 September 1952:186

[3] Mannankulam Estate Report, 2023.

[4] The Daily News - 29.3.1943

[5] The Observer - 29.3.1943

[6] JameelS.H.M. *Kalmunai Era Contribution to Eastern Development 65 Years Ago* May 10, 2011

[7] Canagaratnam. S.O.(1921) Monograph of the Batticaloa District of the Eastern Province of Ceylon.

[8] சலீம்.ஏ.ஆர்.எம்.(1997). அக்கரைப்பற்று வரலாறு, அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம்.

[9] கந்தையா. வி.சி.(1965).மட்டக்களப்புத் தமிழகம், சுன்னாகம், திருமகள் அழுத்தகம்,

[10] பத்மநாதன்.சி.(2002).இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும். குமரன் புத்தக இல்லம்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

நேர்காணல்


- தர்மவாசன்.எஸ், மன்னன்குளப் பணிப்பாளர், வன்னியனாரின் பேரன்
- மிருணாளினி சந்திரகுமார், முன்னாள் ஆசிரியர் (வன்னியனாரின் உறவினர்)
- மீனா தங்கராஜா, முன்னாள் கிழக்குப்பல்கலைக்கழகப் பேராசிரியர் (வன்னியனாரின் பேத்தி)
- புண்ணியமூர்த்தி.எஸ், ஓய்வுபெற்ற அதிபர்

பின்னிணைப்பு

தர்மரத்னம்வன்னியனார்-பெற்றோருடன்



இலங்கை அரசுப் பேரவையின் உறுப்பினராக வன்னியனார் (1938)



மன்னன்குளத்தில் யானையைப் பராமரிப்பதற்காக 1924இல் தனது 8ஆவது வயதில் வருகை தந்த திருக்கோவிலைச் சேர்ந்த சாமித்தம்பி என்பவரால் இந்தத் தோட்டம் நிருவகிக்கப்பட்டது



மன்னன்குளத்தின் தற்போதைய நிலை

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்



மூலம்: மன்னன்குளம் அறிக்கையில் இருந்து பெறப்பட்டது.